
# திராவிடத்தால் வாழ்கிறோம்

773

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## "நாம் அதானிக்கு அடிமையாகக் கூடாது!"

'மும்மொழிக் கொள்கைக்கு ஆதரவான கையெழுத்து இயக்கம்' என்ற பெயரில், பள்ளி மாணவர்களைத் தேடித்தேடி பிஸ்கட் கொடுத்து, சிலர் கையெழுத்து வாங்கினார்கள். அதன்மூலம் தமிழ்நாடு மும்மொழிக்கொள்கையை ஆதரிப்பது போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவதுதான் அவர்களின் எண்ணம். 3 முறை மாபெரும் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரை நடத்திய மண் தமிழ்நாடு. அந்த உணர்வு இப்போதும் தணியவில்லை என்பதற்கான ஆதாரம்தான் பத்திரிகையாளர் இந்திரகுமார் தேரடியின் சமீபத்திய பதிவு.

'மும்மொழிக் கொள்கை எதிர்ப்பு; தொகுதி மறுவரையறை எதிர்ப்பு; பள்ளிக்கல்விக்கான நிதியை ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு உடனடியாக விடுவிக்க வேண்டும்' என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி மார்ச் 1 முதல் தி.மு.கழக இளைஞர் அணி சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறது. இதில் நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் உள்ள கல்லிடைக்குறிச்சி, தேரடித் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றினேன்.

"நான் பேசும்போது, நம் பிள்ளைகள் அதிகாரத்திற்கு வரவேண்டுமா? அதானிக்கு அடிமை ஆகவேண்டுமா? என்று மக்களை நோக்கிக் கேள்வி எழுப்பினேன். 80 வயது மதிக்கத்தக்க பாட்டி ஒருவர், உற்சாகமாக எழுந்து அதிகாரிகளாக வேண்டும் என்று உரக்க முழக்கமிட்டார். 3 முறை திரும்பத் திரும்பக் கேட்டேன். மூன்று முறையும் அதிகாரிகள் ஆக வேண்டும் என்று சொன்னவர், 'மூன்றாவது முறை எங்க வேலையை எங்க புள்ளைங்க செய்யக்கூடாது' என்றார். தமிழ்நாட்டில் 80 வயது பாட்டிக்குக்கூட கல்வி குறித்த இத்தகைய தெளிவான புரிதல் இருக்கிறது.

இந்த மண்ணிலா இந்தியைத் திணிக்க முடியும்? விஷ்வகர்மாவைத் (குலத்தொழில்) திணிக்க முடியும்? அதானிக்கு நம் மக்களை அடிமையாக்க முடியும்? என்று சங்கிகள் கனாக் காணுகிறார்கள்? இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்! ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!" என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





தே.தனசேகரன்

### தலைவர் தந்த பரிசு!

10.09.2013 அன்று அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களை என்னுடைய பிறந்தநாளை முன்னிட்டு, சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது அவர் எனக்கு பிறந்த நாள் வாழ்த்து கூறியது மட்டுமல்லாமல், வாசல் வரை சென்ற என்னை அழைத்து, ரூ.500 கொடுத்து அனுப்பினார். அந்த நாளை என் வாழ்வின் பொன் நாளாகக் கருதுகிறேன்.

– தே.தனசேகரன், அண்ணா நகர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## ம்லஷ்வருக

### எம்.ஆர்.ராதாவின் `கீமாயணம்'!

25.10.1954 அன்று சென்னை, ஒற்றைவாடை தியேட்டரில், ஆறுவார காலமாக நடத்தப்பட்டுக் கொண்டிருந்த 'இராமாயணம்' நாடகத்தின் இறுதிநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நாடகத்தை ஆக்கம் செய்த திருவாரூர் தங்கராசுவுக்கும், நடித்த நடிகவேள் எம்.ஆர்.இராதாவிற்கும் நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள் முதலியார் தலா ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கினார். இந்த நாடகத்தை ஒரு தினசரி 'கீமாயணம்' என கிண்டல் செய்ய, அதையே பெயராக மாற்றிக்கொண்டார் எம்.ஆர்.இராதா. இந்நிகழ்ச்சி நடைபெற்ற அன்றுதான் 'இரத்தக் கண்ணீர்' திரைப்படம் வெளியானது.

## திராவிட மாடல் அரசு

ர.பிரகாசு

111

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

# யூ-வடிவ மேம்பாலம்!

## டிராஃபிக்கிற்கு குட்-பை!





கழக அரசின் கட்டமைப்புப் பணிகளுக்கு, சென்னை மாநகரமே முதன்மை சாட்சி. கழகம் ஆட்சிக்கு வரும்போதெல்லாம், சென்னையின் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க பாலங்கள் கட்டப்படுவதும், புதிய புதிய கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படுவதும், 'மின்சார ரயில்'- 'மெட்ரோ ரயில்' எனப் புதிய போக்குவரத்துக் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதும், தொழில்துறை சார்ந்த பிரமாண்ட கட்டமைப்புகளை எழுப்புவதும் என, சென்னையை சிங்காரச் சென்னையாக்க கழக அரசு எடுத்த முயற்சிகள் ஈடு இணையற்றவை.

அந்தவகையில், இந்தியாவிலேயே முதன்முதலாக தகவல் தொழில்நுட்பக் கொள்கையை வெளியிட்ட முத்தமிழறிஞர் கலைஞர், 2000-ஆம் ஆண்டு சென்னை ராஜீவ் காந்தி சாலையில், டைடல் பூங்காவைத் திறந்து வைத்தார். ஒரு லட்சத்து 20 ஆயிரம் சதுர அடியில் பரந்து விரிந்த அந்த தெற்காசியாவின் முதல் பெரிய டைடல் பூங்காவால், தகவல்தொழில்நுட்பத் துறையில் மாபெரும் வளர்ச்சி கண்டது தமிழ்நாடு. தரமணியில் இருந்து, 23 கி.மீ தொலைவுக்கு அப்பால் உள்ள சிறுசேரி வரை தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆயிரக்கணக்கில் முளைத்தன. சுமார் 6 லட்சம் இளைஞர்கள் இங்குள்ள நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இதனால் மத்திய கைலாசம் பகுதியில் இருந்து சிறுசேரி வரையிலான சாலைக்கு பகல் - இரவு எல்லாமே ஒன்றுதான். எப்போதும் பரபரப்புக்குக் குறைவிருக்காது.

### போக்குவரத்து நெருக்கடி!

குறிப்பாக, தரமணி டைடல் பூங்காவில் மட்டும் 20 ஆயிரத்திற்கும் குறைவில்லாத ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இதுதவிர அடையாறு, திருவான்மியூர், தரமணி, பெருங்குடி, வேளச்சேரி பகுதிகளும் கடந்த கால் நூற்றாண்டில் பெரும் வளர்ச்சி கண்டுள்ளன. சென்னையில் இருந்து சோழிங்கநல்லூர் வழியாக கிழக்குக் கடற்கரைச் சாலைக்குச் செல்ல, தரமணி ராஜீவ் காந்தி சாலைதான் பிரதான வழி. அதனால் ராஜீவ் காந்தி சாலை வழியாக, சென்னை மாநகருக்குள் வருவதும், வெளியே செல்வதும் அவ்வளவு எளிதானதல்ல. டைடல் பூங்கா சந்திப்பு வழியாக வாகனங்கள் செல்ல, சாதாரண நேரங்களில் 15 நிமிடமும், காலை- மாலை வேளைகளில் அரை மணி நேரமும் காத்திருக்க வேண்டும். அதற்கு திராவிட மாடல் அரசு கண்ட தீர்வே 'யூ வடிவ மேம்பாலம்'.

### புதிய வடிவிலான மேம்பாலம்!

சென்னையில் பின்தங்கியுள்ள வடசென்னைக்கு 'வட சென்னை வளர்ச்சித் திட்டம்' என்ற பெயரில், தனித் திட்டம் வகுத்து திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்படும் அதேவேளையில், நகரம் விரிவடைந்துகொண்டே செல்லும் தென் சென்னைக்கும் அதற்கேற்ப முக்கியத்துவம் அளித்து, கட்டமைப்புகளை ஏற்படுத்தி வருகிறது, நம்முடைய திராவிட மாடல் அரசு. அந்த வகையில் டைடல் பூங்கா சந்திப்புப் பகுதியில் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வுகாண 'யூ' வடிவ மேம்பாலத் திட்டம் உருவாக்கப்பட்டது.



அதன்படி, இந்திரா நகர் எம்.ஆர்.டி.எஸ். ரயில் நிலையம் ஒரு பகுதியில் ஒரு யூ வடிவ மேம்பாலமும், அதற்கு நேரெதிர் திசையில் ஒரு கி.மீ. தொலைவுக்கு அப்பால், டைடல் பூங்கா சந்திப்புப் பகுதியில் ஒரு 'யூ' வடிவ மேம்பாலமும் அமைக்கத் திட்டமிடப்பட்டது. இதில், இந்திரா நகர் பகுதியில் அமைக்கப்பட்ட முதல் மேம்பாலத்தை 2023-ஆம் ஆண்டு நவம்பரில், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தற்போது, டைடல் பூங்கா சந்திப்பில் ரூ.27.50 கோடி செலவில் இரண்டாவது 'யூ' வடிவ மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதேபோல, பாதசாரிகள் சாலையைக் கடக்க ரூ.11.30 கோடி செலவில் திருவான்மியூர் எம்.ஆர்.டி.எஸ். ரயில் நிலையம் முதல் டைடல் பூங்கா மேம்பாலம் வரையில், மேற்கு நிழற்சாலை சாலையின் குறுக்காக ஒரு நடைமேம்பாலமும் கட்டப்பட்டுள்ளன. இரண்டையும் பிப்ரவரி 25-ஆம் தேதி தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.



### நடை மேம்பாலம்!

ராஜீவ் காந்தி சாலையின் பரபரப்புக்கு மத்தியில், குறுக்கு நெடுக்காக திருவான்மியூர் எம்.ஆர்.டி.எஸ். ரயில் நிலையத்தில் இருந்து டைடல் பூங்காவிற்கும், டைடல் பூங்காவிலிருந்து எம்.ஆர்.டி.எஸ்.ரயில் நிலையத்துக்கும் செல்ல ஒவ்வொரு மணி நேரத்திற்கும் நூற்றுக்கணக்கானோர் செல்கின்றனர். அவர்களின் வசதி மற்றும் பாதுகாப்பிற்காகவும் 'யூ' வடிவ மேம்பாலத்துடன் சேர்த்து நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய புதிய நடை மேம்பாலம் ரூ.11.30 கோடியில் கட்டப்பட்டுள்ளது. 5.25 மீட்டர் அகலமும், 155 நீளமும் கொண்ட இந்தப் புதிய நடை மேம்பாலம், ஏற்கெனவே அப்பகுதியில் இருக்கும் இரும்பு மேம்பாலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

> **டைடல் சந்திப்புப் பகுதியைக் கடக்கும்போது உள்ளூர ஏற்படும் போக்குவரத்து நெரிசல் குறித்த அச்சம் வாகன ஓட்டிகளுக்கு இனி எப்போதும் இருக்கப்போவதில்லை என்ற நிம்மதியை 'திராவிட மாடல் அரசு' ஏற்படுத்தியுள்ளது.**

### நெரிசலுக்குத் தீர்வு!

இந்த 'யூ' வடிவ மேம்பாலம் 510 மீட்டர் நீளமும், 8.50 மீட்டர் அகலமும் கொண்டது. மேம்பாலத்தின் மையத்தூண் 18 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு மணி நேரத்திற்கு சுமார் 15,000 பேர் கடந்துசெல்லும் 'டைடல் பூங்கா' சந்திப்புப் பகுதியில் இனி சிக்னலுக்காக அரை மணி நேரம் வரை யாரும் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. திருவான்மியூரில் இருந்து டைடல் பூங்கா சந்திப்பு வழியாக மத்திய கைலாசம் நோக்கிச் செல்லும் வாகனங்கள், இடதுபுறமாக 'யூ' வடிவ மேம்பாலத்தில் ஏறி, மத்திய கைலாசம் நோக்கிச் செல்லும் சாலையில் இணைந்துவிடலாம். அதேபோல பெருங்குடி, தரமணி வழியாக இருந்து வரும் வாகனங்கள் திருவான்மியூர் நோக்கிச் செல்ல இந்திரா நகர் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் 'யூ 'வடிவ மேம்பாலத்தில் ஏறி, அவ்வழியில் எளிதாக இணைந்துவிடலாம்.

டைடல் சந்திப்புப் பகுதியைக் கடக்கும்போது உள்ளூர ஏற்படும் போக்குவரத்து நெரிசல் குறித்த அச்சம் வாகன ஓட்டிகளுக்கு இனி எப்போதும் இருக்கப்போவதில்லை என்ற நிம்மதியை 'திராவிட மாடல் அரசு' ஏற்படுத்தியுள்ளது.

...துடிக்கும்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.